ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2184/53 - 2020 ජූලි මස 18 වැනි සෙනසුරාදා - 2020.07.18

*2184/53 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ஆந் திகதி சனிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

***2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டம்***

*2 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்குரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் வியாபாரப் பண்ட இனம் தொடர்பில், அவ்வட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவீடுகளில் குறித்துரைக்கப்படும் வீதங்களில் விசேட வியாபாரப் பண்ட அறவீடொன்றை விதிக்கின்றேன்.*

*இக்கட்டளை 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆந் திகதி முதல் ஆரம்பமாகும் 06 மாத காலப்பகுதிக்காக, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக செல்லுபடியுடையதாதல் வேண்டும்.*

**மஹிந்த ராஜபக்ஷ,**
*நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர்.*

*நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2020, யூலை 18.*

**அட்டவணை**

| I ஆம் நிரல் | | | | II ஆம் நிரல் |
|---|---|---|---|---|
| வியாபாரப் பண்ட இனம் | | | | விசேட வியாபாரப் பண்ட அறவீடு |
| இல. | எச்.எஸ். தலைப்பு | எச்.எஸ். குறியீடு | விவரணம் | |
| 01 | 03.05 | 0305.59.10 | மாசி மீனும் அதற்குப் பதிலானவையும் | கிலோகிராமிற்கு 102.00 ரூபா |
| 02 | 04.06 | 0406.20 | அரைக்கப்பட்ட அல்லது தூளாக்கப்பட்ட பாலாடைக் கட்டிகள், எல்லா வகையானவைகளும் | கிலோ கிராமிற்கு 200.00 ரூபா |
| 03 | 09.09 | 0909.21 | கொத்தமல்லி விதை - நசுக்கவோ அல்லது அரைக்கவோ படாதவை | கிலோ கிராமிற்கு 26.00 ரூபா |
| | | 0909.22 | கொத்தமல்லி விதை - நசுக்கப்பட்டவை அல்லது அரைக்கப்பட்டவை | கிலோ கிராமிற்கு 52.00 ரூபா |
| 04 | 09.10 | 0910.30.10 | மஞ்சள் - நசுக்கவோ அல்லது அரைக்கவோ படாதவை | கிலோ கிராமிற்கு 102.00 ரூபா |
| | | 0910.30.90 | மஞ்சள் - பிற | கிலோ கிராமிற்கு 360.00 ரூபா |
| 05 | 11.06 | 1106.10.10 | உழுந்து மா | கிலோ கிராமிற்கு 325.00 ரூபா |

08-38

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.